SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 39. TML1178 - கிறித்துவ சமயத்தில் பெண்களின் நிலைபாடு

முனைவர் து.லதா
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை,
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு–12

## முன்னுரை

*கிறித்துவ சமயத்தில் பெண்களின் நிலையும், கிறித்துவ சமூகத்தில் பெண்கள் பெற்றுள்ள அங்கீகாரம் குறித்தும் கிறித்துவ சமயங்களில் பெண்களின் நிலைப்பாடு என்னம் தலைபின் கீழ் இவ்வாய்வானது ஆராயப்படுகிறது.*

*பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறைவன் இவ்வுலகத்தைப் படைத்து பூமியிலுள்ள சகல சிருஷ்டிகளையும் ஆள்வதற்கு தன் சாயிலாக மண்ணினால் மனிதனை உண்டாக்கி தனது ஜீவ சுவாசத்தை அவனுக்குள் ஊதினார். இதன் விளைவாக அவன் ஜீவாத்மாவானான். கடவுள் அவனுக்கு ஆதாம் என்று பெயாரிட்டார். ஆதாம் என்றால் செம்மண் என்ற பொருளைத் தருகிறது. மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்றும் அவனுக்குத் துணையாக ஏவாள் என்னும் பெண்ணையும் உண்டாக்கினார். ஆங்கிலத் திருமறையில் துணை என்பதற்கு HELPER என்னும் சொல்லைக் கையாண்டுள்ளனர். பெண்ணைப் படைக்கும் போது மட்டும் ஆதாமை அயர்ந்த நித்திரை வரச்செய்து. அவனுடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அதிலிருந்து பெண்ணை உண்டாக்கினார். இவள் மனிதனிடத்திலிருந்து உண்டாக்கப்பட்டபடியாழ் ஆதாம் அவளுக்கு மனுசி என்று சொல்லி ஏவாள் என பெயரிட்டான் என்று கிறித்துவத் திருமறை கூறுகிறது. பெண் ஆணுக்குத் துணையாகப் (HELPER) படைக்கப்பட்டவள். ஆண் துணையில்லாமல் தனித்து இயங்குவது கடினம் என்பதை இந்நிகழ்வு உணர்த்துகிறது.*

## இல்லறத்தில் பெண் :–

*அன்பைப் போற்றும் உன்னத நிலையான கணவன் மனைவி உறவே இல்லறம் ஆகும். இல்லறத்தில் முதன்மையாக விளங்கும் இவ்விருவரும் அன்பால் இணைந்து அகமகிழ வாழ்ந்து இல்லறத்துடன் நல்லறச் செயல்களில் ஈடுபட்டு இறுதியில் வீடுபேறு அடைவதே சிறப்புடைய வாழ்வு என்று நம் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. கணவன் மனைவி உறவு நிலைக் குறித்து கிறித்துவத் திருமறையில் “ தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்படிந்திருங்கள் என்றும்” ” மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்படியுங்கள்” 2 என்று கூறுகிறது.*

*கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே (கிறிஸ்து) சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறது போல மனைவிகளும் தங்கள் புருஷர்களுக்கு எந்த காரியத்திலும் கீழ்படிந்திருக்கவேண்டும்”3 என்று திருமறை மொழிகிறது. மேலும் கணவர்களுக்குச் சொல்லும் போது “புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூறுங்கள்” 3 என்றும் “புருஷர்களும் தஙகள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்பு கூறவேண்டும். என்றும் தன் மனைவியில் அன்பு கூறுகிறவன் தன்னில்தான் அன்பு கூறுகிறான் ”4 என்று கணவன் மனைவி உறவு நிலையின் மேன்மையை எடுத்தியம்புகிறது“ இதின் நிமித்தம் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாமிசமாக இருப்பார்கள்”5 என்று திருமறை கூறுகிறது. இந்நிலை செவ்வியல் இலக்கியமான சங்க இலக்தியத்தில்*

“ யாவும் ஞாயும் யாராதியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் – தனவே ”6

*செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் போல அன்புடைய நெஞ்சம் கொண்ட தலைவனும் தலைவியும் ஒன்று பட்டிருந்தனர் என்று தலைமக்களின் உறவுநிலையை ஆழமாக எடுத்துக் காட்டுகிறது. இந்நிலையை கிறித்துவ சமயத்தில் கணவனைக் குறித்துச் சொல்லும் போது " அவனவன் தன்னிடத்தில் அன்புகூறுவது போல தன் மனைவியினிடத்தில் அன்பு கூறக்கடவன் , மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக் கடவள். என்று கணவன் மனைவி இருவருக்கும் சமமான நிலைபாட்டைக் குறித்து திருமறை விளக்குகிறது.*

**கைம்பெண்கள் நிலை:–**

*பழந்தமிழர் சமுதாயத்தில் பெண்கள் கணவன் இறந்தவுடன் தானும் உடன் சென்று மாய்த்துக் கொள்ளும் நிலை இருந்துள்ளது. இதனைப் " பாலை நிலை" என்னும் தாபத நிலை என்றும் கூறுவர் ஙதப்பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டு என்பவர் கணவன் போரில் மாய்த்து விட எமக்குப் பொய்கையும் தீயும் ஒரு தன்மைத்து என்று கூறி தீயில் பாய் முற்படுகிறாள். மேலும் அணில் போன்று வரிகளை உடைய, வாளால் வெட்டப்பட்ட வளைந்த வெள்ளிரிக்காயின் வெள்ளை நிறமுடைய விதை போன்ற வெள்ளைச் சோற்றில் நெய் கலவாது பானையின் அடியில் நீருடன் கலந்த வெள்ளைச் சோற்றைப் பிழிந்து எடுத்து வெள்ளை எள்ளைத் துவயலாக்கி புளியிட்டு சமைத்த வேளைக்கீரையை உணவாகக் கொண்டு, பாயின்றி சிறிய கற்கலால் ஆன படுக்கையில் படுத்து வருந்துகின்ற பெண்களைப் போல நான் வருந்த மாட்டேன் என்பதை*

''அணில் வரிக் கொடுங்காய் வாள் போழ்ந்திட
காழ் போல் நல் விளர் நறுநெய் தீண்டாது
அடை கிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள் எள் சாந்தொடு. புளிப்பெயது அட்ட
வேளை வெந்ததை வலசி ஆக பரற்மெய் வாதியும்
உயவல் பெண்டிரேம் அல்லோம் மாதோ'',7

*என்னும் செய்தியால் புறநானூற்றுப் பாடல் வழியாக கணவனை இழந்த பெண்களின் அவலநிலையை அறிய முடிகிறது. ஆனால் கிறித்துவ சமயத்தில் கணவனை இழந்த கைம்பெண்ணை நிந்தனையாகப் பார்ப்பதில்லை. அவர்களைத் தள்ளிவைக்கவும் இல்லை. கிறித்துவ சமயத்தின் தோற்றமாக இருக்கும் சத சமயத்தில் ஏறத்தாழ கி.மு.1126 க்கும் 1105க்கும் இடைப்பட்ட காலத்தில் இஸ்ரவேல் நாட்டில் பெத்லகேம் என்னும் தாவீது நகரில் வாழ்ந்த நகோமி ரூத் இரு கைம்பெண்களின் வழியாக இறைவன் செயலாற்றி ரூத் என்னும் இளம் கைம்பெண் மணம் செய்து கொள்ளும் நிகழ்வை பரிசுத்த வேதாகமம் எடுத்துரைக்கிறது. மனித வாழ்வில் துயரமாகிய கடலைக் கடக்க கடவுள் துணை புரிந்து வெற்றி மகுடமாக மாற்றித் தருகிறார். இத்தகைய உன்னத நிலைபாட்டை கடவுள் பெண்களுக்கு அளிக்கிறார் என்பதை திருமறையிலுள்ள ரூத் என்னம் நூலின் வழியாக அறியலாம்.*

*மோவாப் தேசத்தில் வசிக்கும் எலிமெலேக்கு, நகோமி என்னும் சத தம்பதியினருக்கு மக்லோன் கிலியோன் என்னும் இரண்டு மகன்கள் இருந்தனர் அவர்களுக்கு மோவாபியர் தேசத்திலேயே பெண் கொண்டனர். அவர்கள் பெயர்கள் முறையே ஓர்பாள், ரூத் என்பவர்கள் அவ்விருவாரின் திருமண வாழ்வு 10 ஆண்டுகள் இனிதாகக் கழிகிறது. இந்நிலையில் நகோமி கணவர் மற்றும் தன் இரண்டு மகன்களும் அடுத்தடுத்து சில காலங்களில் மரணித்து விடுகின்றனர். இந்நிலையில் நகோமி தன் சொந்த நாடான இஸ்ரவேல் என்னும் சத தேசத்திற்குச் செல்லத் தீர்மாணிக்கிறாள். தன் இரண்டு மருமகள்களையும் அழைத்து " கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டில் நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று சொல்லி, அவர்களை முத்தமிட்டு "8 மீண்டும் மணம் முடித்து உங்கள் வாழ்வைப் புதியதாகத் துவங்குகள் என்று கூறி அனுப்ப முயல்கிறாள் நகோமி. அதற்கு அவர்கள் நகோமியை விட்டு போக மறுக்கின்றனர் . நீங்கள் உங்கள் வாழ்க்கையை வளமாக அமைத்துக் கொள்வாதே முறை என்று கூற, அவர்களில் ஓர்பாள் மாமியாரின் பேச்சுக்கு இணங்கி தன் இனத்தார் வீட்டுக்குச் சென்று விடுகிறாள். ஆனால் ரூத் போக மறுக்கிறாள் உம்முடை ஜனம் என்னுடைய ஜனம்.. உம்முடை தேவன் என்னுடைய தேவன். உங்களோடு வாழ்ந்து உங்களோடு இறப்பேன் என்றாள். நகோமி வற்புறுத்தியும் ரூத் தன் மாமியாரை விட்டு போகவில்லை. அவளைத் தன் சொந்த நாட்டிற்கு அழைத்துச் சென்று நாகோமி தன் கணவரின் சொந்தத்தில் உள்ள போவாஸ் என்னும் உறவிக்கார பையனை ரூத்திற்கு மணம் செய்து வைக்கிறாள். இங்ஙனம் கிறித்துவ சமயம் தோன்றுவதற்கு முன்பே யூத சமயத்திலிருந்தே கைம்பெண்கள் மணம் புரிவதை அனுமதிக்கிறது. கைம்பெண்களை ஒடுக்கவோ தள்ளி வைக்கவே இல்லை. அதற்குப் பின் வந்த கிறித்துவ சமயத்திலும் இயேசு பெருமான் கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வதற்குத் தடை கூறவில்லை. மாறாக மறுமணம் புரியாமல் வாழும் விதவைகளின் துன்ப நிலையைக் கண்டு மனம் கலங்கிய நிகழ்வுகள் திருமறையில் இடம் பெற்றுள்ளன. சமுதாயத்தில் அவாக்ளைக் தள்ளிவைத்தோ ஏளனம் பேசியோ, தவறான பார்வையோ கைம்பெண்களிடம் காட்டியதாக வேதத்தில் கூறப்படவில்லை. இதிலிருந்து கிறித்துவ சமுதாயத்தில் ஆணோ பெண்ணோ மறுமணம் செய்து கொள்ளலாம் என்னும் சமத்துவத்தை போதிக்கிறது என்பதை அறிய முடிகிறது.*

*ஒரு நாள் இயேசு பெருமான் தேவாலயத்தில் உபதேசம் செய்து கொண்டிருந்த போது சத மத குருக்கள் விபச்சாரம் செய்த ஒரு பெண்ணைப் பிடித்து வந்து மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி இவளைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமே என்ன சொல்லுகிறீர் என்று சதர்கள் கேட்க அதற்கு அவர் " உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக் கடவன் 9 என்று கூற அதைக் கேட்ட அவர்கள் தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு பெரியோர் முதல் சிறியோர் வரை ஒவ்வொருவராய்ச் சென்று விட்டனர். அந்த விபச்சாரப் பெண்ணைப் பார்த்து நீ போ, இனி பாவம் செய்யாதே என்று கூறி அனுப்பி விட்டார். இந்நிகழ்வில் பெண் மீது மட்டும் குற்றம் சுமத்தாமல் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஆண் பெண் இருவருமே பாவம் செய்தவர்களாவே கருதப்படுகின்றனர்.*

### விவாகரத்து

*ஆண் பெண் இருபாலரில் தவறான நடத்தை காணப்பட்டால், அவர்களின் துணைவர்களான கணவனோ மணைவியோ தவறான நடத்தையில் ஈடுப்பட்டவர்களை விவாகரத்து செய்யலாம் அவ்வாறு விவாகரத்து பெற்ற ஆண் அல்லது பெண்ணைத் திருமணம் புரிபவர்கள் அவர்களுடன் விபச்சாரம் செய்தவர்களாகக் கருதப்படுகின்றனர்." வேசித்தன் முகாந்தரத்தினா லொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன். அவளை விபச்சாரம் செய்யப் பண்ணகிறவனாயிருப்பான். அப்படித் தள்ளி விடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபச்சாரம் செய்கிறவனாய் இருப்பான் " 10 என்றும் " ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று" என்றும் திருமறை கூறுகிறது.*

*இதிலிருந்து ஆண் பெண் இருபாலருக்குமே ஒரே மாதிரியான சட்டங்கள் இருப்பதை கிறித்துவ திருமறையின் வாயிலாக அறியமுடிகிறது. நம் தமிழ்ச் சமுதாயத்தில்*

''அச்சமும் நானும் மடனும் முந்துறத்தில்
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப'' 12

*என்னும் தொல்காப்பிய நூற்பா வழி பெண்ணுக்கு அச்சம், மடம் , நானம் , பயிர்பு என்னும் குணங்களை வைத்து உயிரினும் சிறந்ததன்று நானே நாணினும் செயீர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று என்னும் நூற்பாவில் கற்பு பெண்களுக்கு மட்டுமே உரியது என்று இன்னும் கூறி வருகின்ற நிலை நம் தமிழ் சமுதாயத்தில் நிலவுவதை அறியலாம். கிறித்துவ சமயத்தில் கற்பு நிலை என்பது இருபாலருக்கும் உரியது என்று கூறுவதிலிருந்து ஆண் பெண் இருபாலருக்கும் சமத்துவம் கொடுக்கிறது என்பதை இவ்வாய்வின் வழியாக அறிய முடிக்கிறது. நம் தமிழ் பாரம்பரியக் கிறித்துவர்களில் சிலர் இன்னும். தமிழ் மரபைக் கடைப்பிடிக்கின்றனர். திருமறையை முழுமையாகப் படித்து அதன்படி நடக்கின்ற.கிறித்துவ மக்கள் மட்டுமே திருமறையின் படி நடக்கிறனர்*

### தொகுப்புரை

*கிறித்துவ சமயத்தில் ஆண் பெண் இருபாலருக்கும் சட்டங்கள் சமமாகவே இயற்றப்பட்டுள்ளது. எனவே ஆண் பெண் இருவரும் சமமாகவே நடத்தப்படுவதால் கிறித்துவ சமயத்தில் பெண்ணியம் அதிதமாக பேசப்படுவதுல்லை என்பதை இவ்வாய்வின் வழியாக அறிய முடிகிறது.*

### அடிக்குறிப்பு

1. பரிசுத்த வேதாதகம் – ஆதியாகமம் – 2: 21 – பக் – 3
2. மேலது எபேசியர் 5: 22 – 23 பக் – 268
3. மேலது எபேசியர் 5: 24
4. மேலது எபேசியர் 5: 25
5. மேலது எபேசியர் 5: 31
6. குறுந்தொகை – பாடல் எண் 40
7. புறநானூறு பாடல் எண் 195
8. மேலது : ரூத் : 1 : 9 ங் பக்–334
9. யோவான் 8 : 7 ங் பக்கம் 137
10. மேலது மத்தேயு 5 : 32
11. மேலது மத்தேயு 5 : 28
12. தொல்காப்பியம் – பொருளதிகாரம் நூல் 12

### துணைநூற் பட்டியல்


1. பரிசுத்த வேதாகமம், இந்திய வேதாகமச் சங்கம், 206, மகாத்மா காந்தி சாலை, பெங்களூர் –560001
2. குறுந்தொகை – கழகவெளியீடு
3. புறநநூறு – கழகவெளியீடு
4. தொல்காப்பியம் – பொருளதிகாரம் – இளம்நரனர் உரை